V12Eco

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

வகுப்பு 12
பொருளியல்

நேரம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும்: 20×1=20

1) பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ............ ஆகும்.
அ) மொத்த விலைக் குறியீடு ஆ) வாணிபச்சூழல்
இ) பணவீக்கம் ஈ) தேசிய வருவாய்

2) முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ............ ஆகும்.
அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

3) திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ............ ஆகும்.
அ) இரு துறை மாதிரி ஆ) முத்துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேல்சொல்லப்பட்ட அனைத்தும்

4) GNP = ..........+ வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.
அ) NNP ஆ) NDP இ) GDP ஈ) தனிநபர் வருமானம்

5) மொத்த மதிப்பிலிருந்து ............ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்.
அ) வருமானம் ஆ) தேய்மானம்
இ) செலவு ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு

6) வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு ............ ஆகும்.
அ) தொகுத்தேவை ஆ) தொகு அளிப்பு
இ) விளைவுத்தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு

7) பெருக்கியின் மதிப்பு =
அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

8) மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்.
அ) உயர்ந்தபட்சமாக ஆ) மிகமோசமாக
இ) மிக குறைந்தபட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்

9) நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) இ-வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்

10) அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்
அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள் மட்டும்
இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிபம் மட்டும்

11) உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்
அ) சிங்கப்பூர் ஆ) ஜெனிவா இ) சியாட்டிலில் ஈ) டோஹா

12) பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது
அ) பொருளாதார முன்னேற்றம் ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம் ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

13) $Y = \beta 0+\beta 1x$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் Y என்பது ............
அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி
இ) தொடர்ச்சி மாறி ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

14) பின்வரும் எந்த ஒன்று புறஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது?
அ) UV-A ஆ) UV-C
இ) ஓசோன் படலம் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

15) முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர் ............
அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
இ) நீண்ட காலத் திட்டமிடல் ஈ) இவை எதுவுமில்லை

16) $Y = \beta 0+\beta 1x$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் X என்பது ..............
அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி
இ) தொடர்ச்சி மாறி ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

17) பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ............ என அழைக்கப்படுகிறது.
அ) பணவீக்க வீதம் ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) GNP ஈ) உண்மைத் தேசிய வருவாய்

18) கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ............ ஆகும்.
அ) வட்டிவீதம் ஆ) விளைவுத் தேவை இ) தொகுத்தேவை ஈ) தொகு அளிப்பு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



19) MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு

அ) 2 ஆ) 1/2 இ) 0.2 ஈ) 20

20) பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.

அ) நடக்கும் ஆ) ஓடும் இ) தவழும் ஈ) தாவும்

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். 7×2=14**

**வினா எண் 30 கட்டாயம் விடையளிக்கவும்.**

21) "வருமானத்தின் வட்ட ஓட்டம்" - வரையறு.

22) தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?

23) தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

24) நுகர்வுச் சார்பு என்றால் என்ன?

25) தேக்க வீக்கம் என்றால் என்ன?

26) வணிக வங்கிகள் என்பதனை வரையறு.

27) செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?

28) தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?

29) பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

30) புவி வெப்பமயமாதல் என்பதனை வரையறு.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளிக்கவும். 7×3=21**

**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.

32) தனிநபர் வருமானத்திற்கும், செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

33) தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.

34) நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.

35) தேவை - இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.

36) இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

37) நவீன அரசின் பணிகள் யாவை?

38) இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.

39) நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

40) பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண்:

14, 22, 9, 15, 20, 17, 12, 11

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்: 7×5=35**

41) அ) முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக. **(அல்லது)**

ஆ) தொன்மைக்கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

42) அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. **(அல்லது)**

ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

43) அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க. **(அல்லது)**

ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

44) அ) பணமாற்றுவீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக. **(அல்லது)**

ஆ) பொதுநிதியின் எல்லைகளை விளக்குக.

45) அ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க. **(அல்லது)**

ஆ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

46) அ) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும். **(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக்கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தேவை X** | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| **விற்பனை Y** | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

47) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க. **(அல்லது)**

ஆ) வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பலவகை பற்றாக்குறைகளை விளக்குக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com